**மெதகம பிரதேச சபை**

**மொனறாகலை மாவட்டம்**

----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 16 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

நிதிக் கூற்றுக்களானவை மெதகம பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான பெக்கோலோடர் இயந்திரத்தை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 140,620 இற்கான பெற வேண்டிய வருமானத்தினை கணக்கீடு செய்திக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 58,331,134 இற்கான 02 சொத்து விடயங்கள், ரூபா 15,507,020 இற்கான பொறுப்பு விடயம் ஒன்று என்பனவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,521,335 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,981,372 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 3,539,963 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 3,068,008 இற்கான நிலுவை வருமானத்தினை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 வீதவரி

----------

19 வீதவரி அலகுகளில் இருந்து தொடர்ச்சியாக வீதவரி அறவீடு செய்திருக்கவில்லை அத்துடன் அது தொடர்பான நிலுவை வீதவரி மீதி ரூபா 89,316 ஆகும். 27 வீதவரி அலகுகளில் இருந்து குறிப்பிட்ட வரி செலுத்த வேண்டிய வரை பெயர் குறிப்பிட்டு நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

-------------

சபைக்கு சொந்தமான 07 ஆதனங்களை 2014 ஆண்டின் போது கேள்வி கோறப்படாமல் 2013 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு பெற்றிருந்த நபர்களுக்கு அவ் வாண்டின் கேள்வித் தொகைக்கு நூற்றிற்கு 5 கூட்டி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

2.2.4 ஏனைய வருமானங்கள்

-----------------------------------

மீளாய்வாண்டு ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதி தொடர்பாக பக்கோலேடர் இயந்திரத்தை 08 நபர்களுக்கு வாடகை அடிப்படையில் சேவை வழங்கியது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 140,620 இற்கான தொகையொன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகை பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப்பணம் | 1,925,640 |
| முத்திரைக் கட்டணம் | 274,918 |

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

---------------------------------------------

மீளாய்வாண்டின் போது 04 அபிவிருத்தி வேலை திட்டங்களின் கீழ் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,687,327 இற்கான 07 நிர்மாண வேலைகள் பல்வேறு காரணிகளினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 19(1)(i) ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூலமான பூர்வாங்க அங்கீகாரம் இன்றி பல்வேறு பதவிகளுக்காக மூன்று நபர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 315,070 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்